## DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C.324/2023**

**Prosecution witness : ம.சா.1** **Date : 24.11.2023**

| | |
|---|---|
| **Name : மனோகரன்** | **Caste : BC** |
| **Father Name: நடராஜ்** | **Calling : விவசாயம்** |
| **Village : கும்பாரப்பட்டி** | **Religion : இந்து** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 34** |

**(Complainant and Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் கொளத்தூர் கும்பாரபட்டியில் குடியிருக்கிறேன். என்னுடைய வீட்டின் கதவு எண். 3/7/205. நான் கணம் நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கோரி வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் நான் பணம் கொடுத்து அவர் கொடுக்கவில்லை காசோலை கொடுத்து மோசடி செய்துவிட்டார் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எவ்வளவு பணம் எதிரிக்கு கொடுத்தேன் என்றால் ரூ. 15 லட்சம் கொடுத்தேன். எந்த தேதியில் எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்றால் நவம்பர் 2022. தேதி சரியாக நியாபகம் இல்லை. கடன் தொகையை எங்கு வைத்து எதிரிக்கு கொடுத்தேன் என்றால் என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கோழி பண்ணை வைத்துள்ளேன். விவசாயமும் செய்து வருகிறேன். நான் கோழிபண்ணை எங்கு வைத்துள்ளேன் என்றால் என்னுடைய காட்டிலே வைத்துள்ளேன். வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இதுவரை கட்டியதில்லை. கோழிபண்ணை வைத்திருப்பதற்கான வருமான வரி செலுத்தவேண்டுமென்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கோழிபண்ணை வைத்திருப்பதற்கு சிறுகுறு தொழில் அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதெல்லாம் பொய் என்றும், நான் எதிரிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும், கோழிப்பண்ணை நான் வைக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிரியை எப்படி தெரியும் என்றால் எதிரி சுதாகர்

என்னுடைய உறவினர்( மாமன் முறை உறவினர்.) எதிரி எந்த வங்கியுடைய காசோலையை கொடுத்தார் என்றால் HDFC வங்கி காசோலையை கொடுத்தார். எதிரி என் முன்னிலையில் காசோலையை நிரப்பினார் என்றால் அவர் வரும்போதே காசோலையை நிரப்பிதான் கொண்டு வந்தார். மனோகரன் என்ற பெயரும் மற்றும் காசோலையின் ரூ. 15 லட்சம் எண்ணாலும் எழுத்தாலும் மற்றும் தேதி அனைத்தும் ஒரே பேனாவால் எழுதப்பட்டது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையெழுத்து மட்டும் வேறு பேனாவால் எழுதப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவர் எழுதி கொடுத்தார். நான் வாங்கி கொண்டேன். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் பனியன் கம்பெனி வைத்து நடத்தி வருகிறார். எனக்கு சக்தி என்ற நண்பர் இருக்கிறார் என்றால் சக்தி என்பவரை எனக்கு யார் என்றே தெரியாது. மைத்துனர் சுரேஷ் என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். சுரேஷ் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் Finance தொழில் செய்து வருகிறார். சுரேஷ், சக்தி மற்றும் எதிரி ஆகியோர் சேர்ந்து திருப்பூர் மாவட்டம் செங்கப்பள்ளியில் பாலாஜி பேசன்ஸ் என்ற கம்பெனியை நடத்தி வருகின்றனர் என்றால் சரிதான். முதலில் நடத்தி வந்தார்கள். தற்போது பிரிந்து விட்டார்கள். எதிரி என்னிடம் காசோலையை கொடுக்கவே இல்லை என்றும், 2018 ஆம் ஆண்டில் சுரேஷ் இடம் தான் இந்த வழக்கு காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி தான் என்னிடம் காசோலையை கொடுத்தார். 09.07.2018 ஆம் தேதி இந்த காசோலையை எதிரி சுரேஷ்யிடம் கொடுத்து அதற்காக சுரேஷ்யிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. காசோலை எண் என்னவென்றால் 000002 ஆகும். காசோலை எண். 000002 என்ற காசோலையை எதிரியிடம் நான் கொடுக்கவில்லை என்றும் 09.07.2018 ம் தேதி சுரேஷ்யிடம் வாங்கிய ரூ.1 லட்சம் கடனுக்காக எதிரி கொடுத்தார் என்றும், அந்த தொகையை 2 தவணைகளில் திருப்பி செலுத்தி விட்டார் என்றும், அந்த காசோலையை வைத்து என்னிடம் கொடுத்து பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. 04.06.2022 ம் தேதி சுரேஷ்யிடம் வாங்கிய தொகையை இரண்டு தவணையாக ரூ. 50,000/- வீதம் வங்கி மூலமாக (Transaction No. IT00ZMYC, IT00LZMYE3) செலுத்துவிட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் நேரடியாக எதிரி பணம் வாங்கவில்லை என்றும், எதிரியிடம் இருந்து பணத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி 05.11.2022 ம் தேதி காசோலையை என்னிடம் கொடுத்துவிட்டாரா என்றால் 15.05.2023 அன்று தான் என்னிடம் காசோலையை கொடுத்தார். எத்தனை மணிக்கு காசோலையை கொடுத்தார் என்றால் காலை 7 முதல் 8 மணி இருக்கும். 15.05.2023 ம் தேதி என்னிடம் எதிரி காசோலையை வழங்கவில்லை என்றும், எதிரி மேட்டுருக்கே வரவில்லை என்றும், செங்கப்பள்ளியில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை ஏக்கர் விவசாய நிலம் உள்ளது என்றால் 5.5 ஏக்கர் உள்ளது. எனக்கு 5.5 ஏக்கர் நிலம் இல்லை என்றும், எனக்கும் என் சகோதரிக்கும் இடையே பாகபிரிவினை ஏற்பட்டு நான் 1 ஏக்கர் நிலத்தை மட்டும் ஓட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ரூ.15 லட்சத்தை ஒரே முறையாக கொடுப்பதற்கு எனக்கு வசதிவாய்ப்பு இல்லையென்றால் சரியல்ல. நான் கொஞ்சம் நிலம் விற்று பணம் வைத்திருந்தேன் மற்றும் சீட்டு போட்டு பணம் சேர்த்து வைத்திருந்தேன். நான் நிலம் வாங்குவதற்காக சேர்த்து வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். சுரேஷ்யிடம் வாங்கிய பணத்தை எதிரி கொடுத்து விட்டார்என்றும், சுரேஷ்க்கும் எதிரிக்கும் இருந்த பகையை வைத்து என்மூலமாக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**